வ. எண்.	பொருள்
	செங்கோட்டை நகர்மன்ற அவசர கூட்டம் 2025ம் ஆண்டு ஜூலை 16 தேதி புதன்கிழமை (16/07/2025) காலை 11.30 மணிக்கு நகரமன்ற கூடத்தில் நடவடிக்கைகள்.
	தலைமை:- திருமதி வா. ராதாலட்சுமி நகர்மன்ற தலைவர்
	வ.எ. உ. நவநீத கிருஷ்ணன் ந.ம.ப. துணை
	வ.எ. M. செல்வராஜ் ஆணையாளர்

மன்றப்பொருள் : 01

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நுழைவு வாயில் திருவிதாங்கூர் சமஸ்தானம் மூலம் அமைக்கப்பட்ட புராதான நினைவு சின்னம் ஆகும். மேற்படி நுழைவு வாயில் 14.11.2024 அன்று கனரக வாகனம் மோதியதால் சேதடைந்த நிலையில் உள்ளது சேதத்தின் தன்மை குறித்த ஒருங்கிணைந்த ஆய்வு கூட்டம் 19.11.2024 அன்று நிர்வாக பொறியாளர், பொதுப்பணித்துறை(கட்டுமானம்) கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை கண்காணிப்பாளர், உதவி இயக்குநர் (கனிமம்) புவியியல் மற்றும் சுரங்கதுறை, உதவி இயக்குநர், நிலஅளவை துறை, காப்பாளர் தொல்லியல் துறை, செங்கோட்டை நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் கொண்ட குழு ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தது. அதன்படி நுழைவு வாயில் கட்டிடம் கட்டி 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. எனவே பொதுப்பணிதுறை மரபு கட்டிடம் மூலம் மரபு கட்டிடம் (Heritage Department) பொறியாளர் மூலம் மீண்டும் ஒருமுறை ஆய்வு செய்து மேல் நடவடிக்கை தொடர தெரிவிக்கப்பட்டது. மரபு கட்டிடங்கள் பொறியாளர் ஆய்வு அறிக்கையில் நுழைவு வாயில் இருபுறமும் உயரத்தை கட்டுப்படுத்தும் தடுப்புகள் அமைக்கவும் போக்குவரத்தை கட்டுபடுத்தவும் விரைவாக நுழைவு வாயிலினை புணரமைக்கும் பணியினை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.,

இந்நிலையில் கடந்த 23.06.2025 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் நுழைவு வாயில் அதிக சேதமுற்று இருப்பதால் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படா வண்ணம் நுழைவு வாயிலை துண்டாக்கி எடுத்து வேறு பாதுகாப்பு இடத்தில் வைத்து பார்த்துக் கொள்ள தெரிவிக்கப்பட்டது. நுழைவு வாயிலின் அகலத்தை அதிகரித்தும், உறுதிபடுத்தியும் அமைக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாகமும், ஊரக வளர்ச்சி துறையும் இணைத்து பொதுப்பணித்துறையில் அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர் மூலம் பணியை விரைவில் தொடங்கி செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. உதவி செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம் அவர்களது கடிதத்தில் அத்துறை மூலம் பாரம்பரியம் கட்டிடங்களை பாதுகாத்து சீரமைத்து புணரமைக்கும் பணிகள் மட்டுமே செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதால் நகராட்சி சார்பில் நுழைவு வாயிலை துண்டாக்கி எடுத்து வேறு இடத்தில் வைக்க தெரிவிக்கப்பட்டது. எனவே மிகவும் சேதமுற்ற நிலையில் உள்ள நுழைவு வாயிலை அசம்பாவிதம் ஏதும் ஏற்படும் முன்னர் இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிதாக அகலமான நுழைவு வாயில் அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) பொதுமக்களின் பாதுகாப்பு கருதி பணியினை விரைந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.